"தமிழகத்தை ஊட்டச்சத்து குறைபாடற்ற மாநிலமாக மாற்றுவோம்"

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப்
பணிகள் துறை,
தரமணி, சென்னை 600 113.

---

நக.எண்.827/NC1-2/2023 நாள்.03 02.2023

ஐயா/அம்மையீர்,

பொருள்: ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் – குழந்தைகள் மைய பயனாளிகளுக்கு சத்து மாவு வழங்குதல் – ஏதேனும் குறைபாடுகள் காணப்படும் பட்சத்தில் - சத்துமாவிற்குரிய தொகை பிடித்தம் செய்தல் குறித்தான அறிவுரைகள் வழங்குதல் தொடர்பாக.

பார்வை: மாவட்ட திட்ட அலுவலர்களுக்கான ஆய்வுக்கூட்ட அறிவுரைகள், நாள் 10.01.2023.

*****

குழந்தைகள் மையங்களில் பயனடைந்து வரும் 6 மாதம் முதல் 6 வயது வரையுள்ள குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கு, குழந்தைகள் மையங்கள் மூலம் சத்துமாவு வழங்கப்பட்டு வருகிறது. பயனாளிகளுக்கு சத்துமாவு எவ்வாறு வழங்கப்படவேண்டும் என தெளிவான சுற்றறிக்கைகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

ஆயினும், அவ்வப்போது சத்துமாவு வழங்குவதில் சில குறைபாடுகள் காணப்படுவது தெரிய வருகிறது. மேலும் பத்திரிக்கை, தொலைக்காட்சி போன்ற சமூக ஊடகங்களிலும் சத்து மாவு வெளிச்சந்தையில் விற்கப்படுகிறது, மாட்டுக்கு தீவனமாக்கப்படுகிறது என்பது போன்ற செய்திகள் வருகின்றன. இவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் எழுகிறது.

எனவே, இனிவரும் காலங்களில், குழந்தைகள் மையங்களில் வழங்கப்பட்டுவரும் சத்துமாவு வழங்குதல் மற்றும் இருப்பு பதிவேடுகளை ஆய்வு செய்யும்போது குறைபாடுகள் ஏதேனும் காணப்பட்டால் கீழ்க்குறிப்பிடப்படும் அளவுகளில் இழப்பீட்டுத் தொகை பிடித்தம் செய்யப்படவேண்டும். இவ்விழப்பீட்டுத்தொகை சத்துமாவின் கொள்முதல் விலையில் ஒன்றரை மடங்கு என கணக்கிடப்படவேண்டும்.

| மேற்பார்வையாளர் ஆய்வின்போது குற்றம் கண்டறியப்பட்டால் | குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் ஆய்வின்போது குற்றம் கண்டறியப்பட்டால் | மாவட்ட திட்ட அலுவலர், ஒ.கு.வ.தி ஆய்வின்போது குற்றம் கண்டறியப்பட்டால் | ஏனைய மாவட்ட நிர்வாகம்/ தலைமையிடம் ஆய்வின்போது குற்றம் கண்டறியப்பட்டால் (அல்லது) பத்திரிக்கை, தொலைக்காட்சி போன்ற சமூக ஊடகங்கள் வெளியிட்ட செய்தி உண்மையென கண்டறியப்பட்டால் |
|---|---|---|---|
| குற்றம் கண்டறியப்படும் பொழுது பொறுப்பில் இருக்கும் குழந்தைகள் மையப் பணியாளரிடமிருந்து 100% இழப்பீட்டுத் தொகையும் பிடித்தம் செய்யப்படவேண்டும். | குற்றம் கண்டறியப்படும் பொழுது பொறுப்பில் இருக்கும் மேற்பார்வையாளரிடமிருந்து 25% இழப்பீட்டுத் தொகையும் மற்றும் குழந்தைகள் மையப் பணியாளரிடமிருந்து 75% இழப்பீட்டுத் தொகையும் பிடித்தம் செய்யப்பட வேண்டும் | குற்றம் கண்டறியப்படும் பொழுது பொறுப்பில் இருக்கும் குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரிடமிருந்து 10% இழப்பீட்டுத் தொகையும், மேற்பார்வையாளரிடமிருந்து 20% இழப்பீட்டுத் தொகையும் மற்றும் குழந்தைகள் மையப் பணியாளரிடமிருந்து 70% இழப்பீட்டுத் தொகையும் பிடித்தம் செய்யப்பட வேண்டும். | குற்றம் கண்டறியப்படும் பொழுது பொறுப்பில் இருக்கும் மாவட்ட திட்ட அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதுடன், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலரிடமிருந்து 10% இழப்பீட்டுத் தொகையும், மேற்பார்வையாளரிடமிருந்து 20% இழப்பீட்டுத் தொகையும் மற்றும் குழந்தைகள் மையப் பணியாளரிடமிருந்து 70% இழப்பீட்டுத் தொகையும் பிடித்தம் செய்யப்படும். |

எனவே, மாவட்ட திட்ட அலுவலர்கள் இப்பொருள் குறித்து அனைத்து குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் குழந்தைகள் மையப் பணியாளர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறும், குற்றம் கண்டுபிடிக்கப்பட்டால் உடனடியாக தலைமையிடத்திற்கு விவரங்களை தெரிவிப்பதுடன், குறிப்பிட்டுள்ளவாறு இழப்பீட்டுத் தொகையினை பிடித்தம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், குழந்தைகள் மையங்களில் பயனாளிகளுக்கு வழங்கப்படுவதற்காக விநியோகம் செய்யப்படும் சத்துமாவு களவாடப்பட்டிருத்தல் அல்லது வெளிச்சந்தையில் விற்கப்பட்டிருத்தல் போன்ற குற்றச்செயல்கள் நிரூபணமானால் சம்பந்தப்பட்ட குழந்தைகள் மையப் பணியாளர்கள் மீது துறை நடவடிக்கை எடுப்பதுடன், உரிய விதிமுறைகளுக்குட்பட்டு பணிநீக்கம் செய்யவும் ஏதுவாகும் என்பதை ஒவ்வொரு குழந்தைகள் மையப் பணியாளர்களுக்கும் மாவட்ட திட்ட அலுவலர்கள் / குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் கண்டிப்பாக தெரிவிக்கவேண்டும்.

சத்துமாவு வழங்குவதில் குறைபாடுகள்/ குற்ற செயல்கள் காணப்பட்டால் உடனடியாக ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் இயக்ககத்திற்கு விவரங்கள் தெரிவிக்கவில்லையெனில்சம்பந்தப்பட்ட மாவட்ட திட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஏதுவாகும் என்பதும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/வே.அமுதவல்லி

இயக்குநர் மற்றும் குழும இயக்குநர்

பெறுநர்:

அனைத்து மாவட்ட திட்ட அலுவலர்கள்.

நகல்:

இணை இயக்குநர் (திட்டம்)

இணை இயக்குநர் (நிர்வாகம்)

இணை இயக்குநர் (தேசிய ஊட்டச்சத்துக் குழுமம் )

/ ஆணைப்படி/

இயக்குநர் மற்றும் குழும இயக்குநருக்காக

3/2/23